இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 01.04.2026


# சூப்பர் முதலமைச்சரின் ஸ்டார் அறிக்கை!

தமிழ்நாட்டை இந்தியாவின் நம்பர் ஒன் மாநிலமாக ஆக்கியவர், இந்தியாவின் நம்பர் ஒன் முதலமைச்சராகப் போற்றப்படும் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். நடைபெற இருக்கும் சட்டமன்றத் தேர்தலுக்கான அறிக்கையை, ‘சூப்பர் ஸ்டார் அறிக்கை’ என்று அவர் சொல்லி இருக்கிறார். சூப்பர் முதலமைச்சர் வெளியிடும் அறிக்கை ஸ்டார் அறிக்கையாகத் தானே இருக்கும்!

கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களையே அ.தி.மு.க. அறிக்கையில் வெளியிட்டு இருக்கிறார் எடப்பாடி பழனிசாமி. எனவே, தி.மு.க. அறிக்கைக்கு முன்னதாக தனது அறிக்கையை வெளியிட்டார் பழனிசாமி. இப்போது மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட அறிக்கையைப் பார்த்து விழிபிதுங்கிக் கிடக்கிறார் பழனிசாமி.

**திராவிட முன்னேற்றக் கழகம் உருவான காலம் முதல் மக்களைச் சந்தித்து அவர்களது கருத்தை, கோரிக்கைகளை, கனவுகளைப் பெற்று தேர்தல் அறிக்கையை வெளியிடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளது. 17 ஆவது சட்டப் பேரவைத் தேர்தலுக்கான அறிக்கை தயாரிக்க கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி தலைமையில் குழு அமைக்கப்பட்டது. அக்குழு தமிழ்நாடு முழுவதும் சென்று மக்களது கோரிக்கைகளைப் பெற்று அதனடிப்படையில் இந்த அறிக்கையைத் தயாரித்து வழங்கி உள்ளது. 96 பக்க அறிக்கையில், பக்கத்துக்குப் பக்கம் ஸ்டார்கள்தான்.**

**இப்போதைய கழக அரசின் மாபெரும் சாதனை என்பது, ஒரு கோடியே 31 லட்சம் பெண்கள் மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் பெறுகிறார்கள். இதனை மூன்று மாத காலத்துக்கு தடுக்கும் சதியை பா.ஜ.க. செய்ய நினைத்தது. அந்தச் சதியை முறியடித்து 3 ஆயிரம் ரூபாயும், கோடைகால சிறப்புத் தொகையாக ரூ.2 ஆயிரத்தையும் சேர்த்து ரூ.5 ஆயிரத்தை 1.30 கோடி மகளிரின் வங்கிக் கணக்கில் செலுத்தினார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். கொடுக்க நினைத்தால் எப்படியும் கொடுத்துவிடுவோம் என்பதை செயலில் காட்டினார். ஆயிரம் ரூபாயை இரண்டாயிரம் ரூபாயாக திராவிட மாடல் 2.0 ஆட்சி காலத்தில் உயர்த்தி வழங்குவோம் என்று உறுதி அளித்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.**

கடந்த முறை பதவியேற்று வந்ததும் இட்ட முதல் கையெழுத்து மகளிருக்கு கட்டணமில்லா விடியல் பயணம் ஆகும். விடியல் பயணத் திட்டத்தின் மூலம் இதுவரை 881 கோடி பயணங்களை பெண்கள் மேற்கொண்டுள்ளார்கள். அதன் பயனாக பேருந்தில் பயணம் செய்யும் ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் ரூ.600 முதல் 1200 ரூபாய் வரை சேமிக்கிறார்கள். பெண்களின் சமூகப் பங்களிப்பு அதிகம் ஆகி இருக்கிறது. இதன் தொடர்ச்சியாக பெண்களை தொழில் முனைவோராக ஆக்க நினைக்கிறார் முதலமைச்சர் அவர்கள். சுய உதவிக் குழு உறுப்பினராக இருக்கும் பெண்கள், தொழில் முனைவோராக முன்னேறிடும் வகையில் பிணை எதுவுமின்றி ரூ. 5 இலட்சம் வரை மானியத்துடன் வங்கிக் கடனுதவி வழங்கப்படும் என்ற அறிவிப்பு பெண்களை அடுத்த கட்டத்துக்கு உயர்த்தும் அருமையான திட்டம் ஆகும்.

‘இல்லத்தரசிகள் திட்டம்’ இப்போதைய அறிக்கையின் சூப்பர் ஸ்டார் அறிவிப்பு ஆகும்!

**“மகளிர் அன்றாடம் பயன்படுத்தும் பல்வேறு வீட்டு உபயோகப் பொருட்களின் தேவை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, இல்லத்தரசிகள் தம் வீட்டில் பயன்படுத்தும் வாஷிங் மெஷின், டி.வி., கிரைண்டர், ஃபிரிட்ஜ், மிக்ஸி, மைக்ரோவேவ் மற்றும் மின் அடுப்புகள் போன்ற வீட்டு உபயோகப் பொருட்களைப் புதிதாக வாங்கவோ அல்லது ஏற்கனவே பயன்படுத்தி வரும் இத்தகைய பொருட்களுக்கு மாற்றாக வாங்கவோ, ‘இல்லத்தரசி’ என்ற புதிய திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ், வருமான வரி செலுத்தாத குடும்பங்களின் இல்லத்தரசிகள் அனைவருக்கும், அவர்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள கடைகளில் மேற்கூறிய வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கிக் கொள்ளும் வகையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 8 ஆயிரம் ரூபாய் கூப்பன் வழங்கப்படும்”** என்ற முதலமைச்சரின் அறிவிப்பானது யாராலும் எதிர்பாராதது.

ஒரு குறிப்பிட்ட பொருளை, ஒரு குறிப்பிட்ட பிராண்ட் மட்டும் கொடுக்காமல், மக்கள் தங்களுக்கு விருப்பமான பொருளை வாங்கிக் கொள்ள கூப்பன் கொடுத்திருப்பது பலத்த வரவேற்பைப் பெற்றுள்ளது. ‘இந்த அறிக்கை ஹீரோ மட்டுமல்ல; ஹீரோயினும் தான்’ என்று முதலமைச்சர் சொன்னது உண்மையில் மிகமிகப் பொருத்தமானது ஆகும்.

கோடிக்கணக்கான பெண்களை இத்திட்டம் மகிழ்விக்கிறது என்றால், கோடிக்கணக்கான உழவர்களை மகிழ்விக்கிறது பம்பு செட்டுகள் வழங்குவோம் என்ற அறிவிப்பு. **“கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் குழாய் பாசனத்தை பெருமளவில் நம்பியே இன்றும் தமிழ்நாட்டின் விவசாயம் உள்ளது. இப்பாசனத்தை மேம்படுத்தும் வகையில், இலவச மின்சாரம் பெறும் சுமார் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு, அவர்கள் தற்போது வைத்திருக்கும் பம்புகளின் சக்தி மற்றும் அவர்களின் பாசனத் தேவைக்கு ஏற்ப, எவ்வித மீட்டரும் பொருத்தப்படாத நவீன மின்சாரப் பம்பு செட்டுகள் வழங்கப்படும்”** என்று அறிவித்துள்ளார் முதலமைச்சர் அவர்கள். உழவர்களின் மனங்களை மகிழ்விக்கும் அறிவிப்பு இது. பல்லாண்டு காலமாக மாற்றாமல் பழைய பம்பு செட்டுகளை வைத்திருக்கும் உழவர்களுக்கு இது வான்மழையைப் போன்ற அறிவிப்பு ஆகும்.

நெல் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 3,500 ஆக உயர்த்தி வழங்கப்படும். கரும்பு கொள்முதல் விலை டன் ஒன்றுக்கு ரூ. 4,500 ஆக உயர்த்தி வழங்கப்படும். பால் கொள்முதல் விலை லிட்டர் ஒன்றுக்கு 5 ரூபாய் உயர்த்தப்படும். இந்த மூன்றும் உழவர்களை மகிழ்ச்சியில் துள்ளி எழ வைத்துள்ளது.

**அனைத்து மக்களது கனவையும் உள்ளடக்கியதாக அரசின் திட்டங்கள் இருக்கும் என்பதை உணர்த்துவதாக உள்ளது இந்த அறிக்கை. கடைக்கோடி மனிதரையும் அரசின் கரங்கள் அரவணைத்துக் காக்கும் என்பதை உறுதி செய்கிறது இந்த அறிக்கை.**

**திராவிட முன்னேற்றக் கழகம் சொன்னால் செய்யும், உறுதியாகச் செய்யும், மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சொன்ன சொல்லைக் காப்பார் என்ற நம்பிக்கை தமிழ்நாட்டு மக்கள் மனதில் உள்ளது. அந்த நம்பிக்கையை இன்னும் அதிகப்படுத்துகிறது தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை.**



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (31.3.2026) அவரது இல்லத்தில், 2026 சட்டமன்ற பொதுத் தேர்தலில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் என்.பாண்டி, எம். சின்னதுரை, ஆர்.செல்லசுவாமி, எல்.சுந்தரராஜன், திருமதி டி.லதா ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் உள்ளார்.

### தலைவர் கலைஞரின்

# திருவாரூருக்குப் புறப்பட்டுவிட்டேன்!

## தேர்தல் பரப்புரை தொடங்குவதற்கு முன் கழகத் தலைவர் – முதல்வர் மு.க,ஸ்டாலின் பதிவு!

சென்னை, ஏப். 1 -

தேர்தல் பரப்புரைப் பயணம் மேற்கொள்ள புறப்படுவதற்கு முன், கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், தலைவர் கலைஞரின் திருவாரூருக்குப் புறப்பட்டு விட்டேன் என்று குறிப்பிட்டுள்ளார்.



அவரது சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தேர்தல் பரப்புரைப் பயணத்தைத் தொடங்க, தலைவர் கலைஞர் பிறந்த திருவாரூருக்குப் புறப்பட்டுவிட்டேன்... மக்களுடன் இரண்டறக் கலக்கும் இப்பயணங்களின் வாயிலாக உங்களைச் சந்தித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றிக்கு, #Dravidian Model2.0 வுக்கு ஆதரவு கேட்டு வருகிறேன். #வெல்வோம்_ஒன்றாக #VoteForDMK**

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### திருச்சி மேற்கு தொகுதியில் போட்டியிடும்

# அமைச்சர் கே.என்.நேரு வேட்பு மனு தாக்கல் செய்தார்!

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நிர்வாகிகள் பங்கேற்பு!

திருச்சி, ஏப். 1 -

திருச்சி மேற்கு தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு அவர்கள் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

தமிழ்நாட்டிற்கான சட்டப்பேரவைத் தேர்தல் வரும் ஏப்ரல் 23ஆம் தேதி ஒரே கட்டமாக நடைபெற உள்ளது.

இந்த தேர்தலில் தி.மு.க. தலைமையில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி, அ.தி.மு.க. தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி, நாம் தமிழர் கட்சி, தமிழக வெற்றி கழகம் உள்ளிட்ட முக்கிய கட்சிகள் போட்டியிடுகின்றன.

திருச்சி மேற்கு தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் தி.மு.க. சார்பில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சரும் கழக முதன்மைச் செயலாளருமான கே.என். நேரு போட்டியிடுகிறார்.

இந்த ஆண்டு தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் நேற்று முன்தினம் முதல் தொடங்கியுள்ள நிலையில் முதல் நாளே கே.என். நேரு வேட்பு மனு தாக்கல் செய்தார்.

வருவாய் கோட்டாட்சியர் சாலை தவ வளவன் அவர்களிடம் தன்னுடைய வேட்பு மனுவை அமைச்சர் கே.என்.நேரு வழங்கினார்.

முன்னதாக வேட்பு மனு தாக்கல் செய்ய வந்த கே.என். நேருவை திமுகவினர் உற்சாகமாக வரவேற்றனர்.

வேபுமனு தாக்கலின் போது அமைச்சர் கே.என். நேரு, மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் வைரமணி, தொழிலதிபர் ரவிச்சந்திரன், ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் வெல்லமண்டி சோமு, மனித நேய மக்கள் கட்சி மாவட்டச் செயலாளர் இப்ராஹிம் ஆகியோர் உடன் இருந்தனர்.

வேட்பு மனு தாக்கல் செய்த பின்பு அமைச்சர் கே.என்.நேரு செய்தியாளர்களை சந்தித்து பேசினார்.

தேர்தலில் யாரும் எங்கும் போட்டியிடுவதற்கு அரசியல் சட்டத்தில் இடம் உள்ளது. அந்த வகையில் விஜய்யும் திருச்சி கிழக்கு தொகுதியில் போட்டியிடுகிறார். களத்தில் மக்கள் யாருக்கு ஆதரவளிப்பார்கள் என்பது எங்களுக்கு தெரியும். மக்களுடைய ஆதரவு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தான் உள்ளது. என்பது எங்களின் முழு நம்பிக்கையாக உள்ளது.

பயத்தின் காரணமாக கூட விஜய் இரண்டு தொகுதிகளில் போட்டியிடலாம் 1977 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் திருச்சியில் அனைத்து தொகுதிகளிலும் தி.மு.க. வெற்றி வாய்ப்பை இழந்த பொழுதும் திருச்சி கிழக்கு தொகுதியில் வெற்றி பெற்றது. எனவே அந்த தொகுதி தி.மு.க.வின் பக்கம் இருக்கும் என்கிற முழு நம்பிக்கையோடு நாங்கள் தேர்தல் பணி ஆற்றுவோம்.

தேர்தல் அறிக்கையில் மகளிருக்கான திட்டங்கள், பொதுமக்களுக்கான திட்டங்கள் விவசாயிகளுக்கான திட்டங்கள் என பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் அறிவுறுத்தி உள்ளார்கள்.

தி.மு.க.வின் தேர்தல் கதாநாயகனாக தேர்தல் அறிக்கை உள்ளது. இதனை மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் மிக சிறந்த ஆட்சியை உருவாக்க நிச்சயம் ஆதரவளிப்பார்கள் என்றார்.



திருச்சியில் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு அவர்கள், திருச்சிராப்பள்ளி மேற்கு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட வேட்பு மனுவை நேற்று முன்தினம் (30.03.2026) திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் அதிகாரி சாலை தவ வளவனிடம் வழங்கினார். அவருடன் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் வெல்லமண்டி சோமு, தொழிலதிபர் ரவிச்சந்திரன் உட்பட அரசு அதிகாரிகள் உள்ளனர்.